**ஹோமாகம பிரதேச சபை - 2023**
**--------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹோமாகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹோமாகம சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்காக செலுத்த வேண்டிய செலவு ரூபா 1,300,000 தொகை இரு தடவைகள் கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் பதிவேட்டில் இருந்துஅகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 நவம்பர் 01 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,927,500 தொகை பெறுமதியான Solor Lamp 15 தொகையினை நிலையான | இந்த சொத்துக்களை கொள்வனவு மீண்டுவரும் செலவு ஏற்பாடுகளின் மூலம் செய்யப்பட்டதனால் நிலையான சொத்துக்களின் கீழ் எடுக்கப்படவில்லை எனினும் | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்ட கிரயம் மற்றும் பயன்படுத்தக் கூடிய காலத்தை அடிப்படையாக கொண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்படும் என. | |
| (இ) | ஹோமாகம பொது வர்த்தக கட்டிடத் தொகுதியில் பன்றி இறைச்சிக் கடை வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக 2023 ஆண்டு 02 மாதங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 375,558 இற்கான காசோலை மதிப்பளிக்கப்பட்டு இருக்காததுடன் அதற்காக செலுத்த வேண்டிய தண்டம் ரூபா 18,778 தொகை மற்றும் அந்த கடையறைக்காக பெற வேண்டிய நிலுவை மின்சார கட்டணம் ரூபா 33,641 தொகை பெற வேண்டியவைகள் என பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மின்சாரக் கட்டணம் பெற வேண்டியவைகள் என தவறுதலாக பதிவு செய்ய முடியவில்லை எனவும் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் பெற வேண்டியவைகள் என பதிவு செய்தல் தவிர்க்கப்பட்டிருந்தது என. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிரய பெறுமதியில் காட்டப்பட்டிருந்த ரூபா 233,517,988 இற்கான கட்டிடங்களுக்கான பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | கட்டிடங்களுக்கான பெறுமானத்தேய்வு கணிக்கப்படவில்லை என. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து பெறுமானத்தேய்வு கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் சீராக்கல்கள் என காட்டப்பட்டிருந்த ரூபா 636,706 இற்கான மறை மீதி தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | சரியாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு இலக்கம் 8 இல் பிரயாண கட்டணச் செலவு கூட்டுத்தொகை ரூபா 1,377,484 தொகை மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த செலவு அட்டவணையில் உட்படுத்தப்பட்டிருந்த பிரயாணக் கட்டணச் செலவின் கூட்டுத்தொகை ரூபா 1,484,799 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 107,315 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | குறிப்பு இலக்கம் 8 இல் பிரயாண கட்டண செலவின் கூட்டுத்தொகை ரூபா 1,377,484.89 சரியானது. அத்துடன் செலவு அட்டவணையில் உள்ளடங்கிய பிரயாணக் கட்டண செலவின் கூட்டுத்தொகை இணைப்பு 09 (i)(ii) இன் படி திருத்தப்பட வேண்டும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | மின்சார பண்ட இருப்பு | 43,320 | பின்கார்ட்/ பரிசோதனை செய்யக் கூடிய ஏனைய ஆவணங்கள் | எதுவித மூல ஆவணங்களும் கண்டறிய முடியாமையால் பல வருட காலம் முதல் காணப்படுகின்ற பௌதீக ரீதியாக காணமுடியாத இந்த இருப்பு மீதியின் சீராக்கல் தொடர்பாக சிக்கல்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றது என. | விசாரணை மேற்கொண்டு சிக்கல்களை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது களஞ்சிய பண்ட இருப்பு | 8,361,983 | பின்கார்ட்/ பரிசோதனை செய்யக் கூடிய ஏனைய ஆவணங்கள் | எதுவித மூல ஆவணங்களும் கண்டறிய முடியாமையால் பல வருட காலம் முதல் காணப்படுகின்ற பௌதீக ரீதியாக காணமுடியாத இந்த இருப்பு மீதியின் சீராக்கல் தொடர்பாக சிக்கல்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றது என. | -மேற்படி- |
| (இ) | திருப்தி செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 4,981,664 | அட்டவணைகள் | இனங்காணப்படாத பொது வைப்பு மீதிகள் 2024 ஆண்டின் போது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை | பிரதேச சபையினால் 2023 ஆண்டில் இணக்கச் சான்றுகள் வழங்கியிருந்த 107 கட்டிடங்கள் | வீதவரி இலக்கங்கள் வழங்கியிருக்காத 68 ஆதனங்களுக்காக | விரைவாக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரச் சட்டத்தின் பிரிவு 143(1) | தொடர்பாக புதிய பெறுமதி மதிப்பீடு வழங்கப்பட்டிருக்கவில்லை. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற புதிய பெறுமதி மதிப்பீட்டின் மூலம் வீதவரிப் பெறுமதி சரியாக திருத்தப்படுகின்றது என. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் xiii விடுமுறைகள் அத்தியாயத்தின் பந்தி 22.4 | அனைத்து சம்பளமற்ற விடுமுறைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் சம்பளமற்ற விடுமுறைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு அறிவித்திருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாபனக் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 110(1) | 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு சொந்தமான பண்டங்கள் களவாடல்/ காணாமல் போதல் ஏற்பட்டிருந்த போதிலும் சேதப் பதிவேட்டில் பதிவதற்காக சபையினால் சேதப் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணிச் செல்லப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 341 316(இ) | 3340 அடியிதழ் புத்தகங்கள் தொடர்பாக அடியிதழ் புத்தகப் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு அடியிதழ் புத்தகப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (iii) நி.பி. 571 | 2009 ஆண்டு முதல் காணப்படுகின்ற 02 வருடங்களை மிகைத்த ரூபா 18,635,215 இற்கான பொதுவான நிர்மாண வேலை வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கு | 2024 ஆண்டில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 2023 வழிகாட்டல் கோவையின் பந்திகள் 2:3:2 (இ) மற்றும் 3.1 | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 22 வியாபர நிலையங்கள் கடந்த ஆண்டு மற்றும் நடைமுறை ஆண்டில் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் மற்றும் வியாபார அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்ட 22 வியாபார நிலையங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 ஏப்ரல் 28 திகதி இலக்கம் LGD/04/2016 கொண்ட சுற்றறிக்கை | சுற்றறிக்கை நடைமுறைகளுக்கு புறம்பாக ரூபா 80,000,000 தொகைக்கான நிலையான வைப்புத் தொகை 2023 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் போது திருப்பி எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.7.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.11 இற்கு இணங்க பெறுமதி கூட்டிய வரி கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் பணம் செலுத்திய பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதி அல்லது அந்த தினத்திற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக் பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2023 ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 4,846,017 இற்கான பெறுமதி கூட்டிய வரி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் வரி செலுத்தல் தொடர்பான அறிக்கை தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 373,112,282 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தினை மிகைத்த செலவு ரூபா 37,738,951 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 228,802,100 | 178,254,149 | 176,899,549 | 123,023,521 | 137,990,912 | 283,704,571 | 170,489,809 | 117,009,558 |
| (ii) | வாடகை | 18,969,400 | 19,435,205 | 18,521,551 | (9,000) | 17,167,850 | 240,392,750 | 13,463,734 | 226,929,015 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,790,600 | 4,746,440 | 4,838,438 | 25,060 | 6,100,556 | 4,062,484 | 3,946,625 | 115,859 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 632,928,600 | 843,659,755 | 973,412,950 | 620,965,649 | 359,252,660 | 981,255,856 | 431,474,550 | 549,781,305 |
| | | 886,490,700 | 1,046,095,549 | 1,173,672,488 | 744,005,230 | 520,511,978 | 1,509,415,661 | 619,374,718 | 893,835,737 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட வீதவரிப் பெறுமதி ரூபா 122,835,410 தொகை இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது என. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சினிமா கொட்டகை ஒன்றிலிருந்து 2022 ஆண்டிற்காக களியாட்ட வரி சபைக்கு கணக்காய்வுத் திகதி வரை செலுத்தியிருக்காமை தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என 2023 மே 22 திகதி குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிறுவனத்திற்கு அறிவித்து வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலதிக ஆலோசனைக்காக அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சினிமா கொட்டகைகளில் இருந்து களியாட்ட வரி அறவீடு செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஏனைய நீதிமன்றத் தண்டப் பணம் எவ்வளவு என கணித்திருக்காததுடன் பெற வேண்டிய முத்திரைக் கட்டண எண்ணிக்கை ரூபா 326,678,000 தொகை காணப்பட்டது. | 2022 ஆண்டிற்குரிய கட்டணமாகும் என. | அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர் தொடர்பு பெற்றுக் கொள்வதற்காக பாதைகள் சேதப்படுத்தியதற்காக அந்தப் பாதைகளின் சேதங்களை தனிப்பட்ட முறையில் தயாரித்துக் கொள்ளும் அடிப்படையில் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் முறையே 58 பாதைகளில் மற்றும் 05 பாதைகள் தொடர்பாக பெற வேண்டியிருந்த ரூபா 5,565,440 இற்கான தொகையொன்று பாதைகளை உண்மை நிலைமைக்கு ஆக்கப்பட்டதா என பரிசோதனை மேற்கொள்ளாமல் சபைத் தீர்மானம் ஒன்றின் மீது விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பாதைகள் மீண்டும் செப்பனிடப்பட்டுள்ளதான என தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீர் தொடர்புகள் பெற்றுக் கொள்வதற்காக 58 பாதைகள் சேதப்படுத்தியதற்காக 2022 ஆண்டிலும் 05 பாதைகளுக்காக 2023 ஆண்டிலும் சபைத் தீர்மானம் ஒன்றின் மீது வைப்புத் தொகைகள் விடுவிக்கப்பட்டிருந்தது என. | பாதையை உண்மை நிலைக்கு ஆக்கப்பட்டது என உறுதிப்படுத்தல் பெற்றுக் கொண்ட பின்னர் வைப்புத் தொகை விடுவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கொரோனா நோய் நிலைமையின் கீழ் இறந்தவர்களின் பூதவுடல்களை தகனம் செய்வதற்காக சபையினால் 2021, 2022 ஆண்டுகளின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 1,176,600 இற்கான தொகை சபைக்கு உள்ளூராட்சி திணைக்களம் (மேல் மாகாணம்) இடமிருந்து 2023 ஆண்டு இறுதியளவில் மீளளிப்புச் செய்திருக்கவில்லை. | மீண்டும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது என. | பெற வேண்டிய தொகைகளை விரைவாக மீளளிப்புச் செய்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையினால் எதிர்காலத்தில் கிடைக்கும் என எதுவிதத்திலும் எதிர்பார்க்கப்பட்டிருக்காத ரூபா 2,749,290 இற்கான பெறுமதியொன்று பொது முற்பண மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 1999 ஆண்டிற்கு மற்றும் அதற்கு முன்னரான காலப்பகுதியை சேர்ந்த தீர்க்கப்படாத முற்பண மீதிகளை பதிவழிப்பதற்கான அங்கீகாரம் உள்ளூராட்சி | தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உதவி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு ஆவணங்கள் கண்டறிய முடியாமல் உள்ளது என. | |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலவின கடன்கொடுத்தோர், களஞ்சியக் கடன்கொடுத்தோர், பொது நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மற்றும் மாகாண சபை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 103,934,178 தொகை காணப்பட்டது. | 2024 ஆண்டில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான அங்கீகாரம் பெற்று வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொததுக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணிகளை தீர்த்துக் கொள்ளாமை மற்றும் உடன்படிக்கையின் பிழையான தன்மை காரணமாக சபைக்கு கிடைப்பது நிச்சயமற்றிருந்த மீகொட பொருளாதார நிலையத்தில் 2023 ஆண்டிற்கான பெற வேண்டிய வாடகை வருமானம் ரூபா 900,000 தொகை மற்றும் நிலுவைத் தண்டப் பணம் ரூபா 27,450,000 தொகை ஆண்டிற்கான வருமானத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 28,350,000 தொகை மிகையாக காணப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மொத்தத் தொகை ரூபா 255,150,000 தொகையினை அறவீடு செய்தல் நிச்சயமற்றுக் காணப்பட்டது. | பிம் சவியவிற்காக காணிகளை நில அளவை செய்யும் போது இந்த காணியின் உரிமை அரசிற்கு உரியதென குறிப்பிடப்பட்டமையால் இந்த ஆதனம் சபைக்கு சொந்தமான ஆதனமொன்றாக காணப்படாததுடன் மீகொட பொருளாதார நிலையத்துக்கு நம்பிக்கை நம்பிக்கை பொறுப்பு சபையின் தர்க்கத்தின் மீது வாடகைத் தொகை செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது என. | இந்த ஆதனத்தின் சட்ட ரீதியான உரிமையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முணசிங்கம முன்பள்ளி மற்றும் சனசமூக நிலையம் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர் ஒருவருடன் 2020 திசெம்பர் 31 திகதி ரூபா 11,542,534 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு மொத்தக் கிரயம் என ரூபா 2,512,333 தொகை செலவிடப்பட்டிருந்தது. பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்காக | நிர்மாண வேலைகளில் தாமதம் ஏற்பட்டதை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணவேலை அலுவல்களின் போது இந்த தாமதங்களை குறைக்கக் கூடிய முறையில் | நிர்மாண வேலை அலுவல்களின் போது ஏற்படுகின்ற தாமதங்களை குறைத்துக் கொள்ளக் கூடியவாறு செயற்படுவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 04 மாத காலம் கடந்திருத்தல் முதலாவது பில் பத்திரத்தை கொடுப்பனவு செய்வதற்காக 08 மாதங்கள் தாமதமாதல், இரண்டாவது பில் பத்திரத்தை செலுத்தாமை என்பதால் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் தாமதமடைவதற்கான காரணம் என காட்டப்பட்டிருந்ததுடன் 2 வருடங்களில் பாரிய அளவில் கட்டிடப் பொருட்கள் விலைகள் அதிகரித்திருந்தமையால் கட்டிடத்தின் வேலையை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என அறிவித்து ஒப்பந்தக்காரரினால் நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்தது. | செயற்படுவதற்கு நெருங்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. | |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 38,646,378 இற்கான ஊழியர் கடன்மீதியில் இறந்துள்ள, ஓய்வுபெற்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 25 பேர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,675,957 தொகைக்கான இடர் மற்றும் விழா கடன்தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊழியர் கடன் மீதியில் இறந்துள்ள, ஓய்வுபெற்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுள்ள 25 பேரிடம் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,675,957.25 ஆகும் என. | ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 71 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 17,006,000 தொகைக்கான ஏற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் என. | தேவைப்பாட்டை இனங்கண்டு அந்த அடிப்படையில் பாதீடு தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 41 செலவு விடயங்களுக்காக ரூபா 19,277,100 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 75 சதவீதத்தை விட கூடிய எண்ணிக்கை செலவிடப்பட்டிருக்காததுடன் அந்த எண்ணிக்கை ரூபா 17,585,952 தொகையாக இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் என. | பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |